# யூலை- 15- சனி

### புனித போனவெந்தூர்

### அவருக்குப் பாடல் பாடுங்கள்: அவரைப் புகழ்ந்தேத்துங்கள்! திபா. 105:2

### முதல் வாசகம் : தொடக்க நூல் 49: 29–32 50:15– 26

மேலும் அவர் அவர்களுக்குக் கட்டளையிட்டுக் கூறியது "இதோ நான் என் இனத்தவரோடு சேர்க்கப்படவிருக்கிறேன். என்னை என் தந்தையருடன் இத்தியனான எப்ரோனின் நிலத்திலுள்ள குகையில் அடக்கம் செய்யுங்கள்.அது கானான் நாட்டில் மம்ரே பகுதிக்கு அருகேயுள்ள மக்பேலாவின் நிலத்தில் அமைந்துள்ளது. ஆபிரகாம் இத்தியனான எப்ரோனிடமிருந்து அந்த நிலத்தைக் கல்லறை நிலத்திற்கென விலைக்கு வாங்கினார்.அங்கே ஆபிரகாமையும் அவர் மனைவி சாராவையும் அடக்கம் செய்தனர் அங்கு ஈசாக்கையும் அவர் மனைவி ரெபேக்காவையும் அடக்கம் செய்தனர். அங்கே தான் நானும் லேயாவை அடக்கம் செய்துள்ளேன். அந்நிலமும் அக்கல்லறையும் இத்தியரிடமிருந்து விலைக்கு வாங்கப்பெற்றவை." அப்பொழுது, யோசேப்பின் சகோதரர் தங்கள் தந்தை இறந்துவிட்டதைக் கண்டு, "யோசேப்பு நாம் அவருக்குச் செய்த அனைத்துத் தீமைகளையும் கருதி, இப்பொழுது நம்மை வெறுத்து உறுதியாகப் பழி வாங்குவர்" என்று எண்ணினர்.எனவே அவர்கள் யோசேப்புக்கு இவ்வாறு செய்தி அனுப்பினர் "உம் தந்தை இறப்பதற்குமுன், "உன் சகோதரர் உனக்குத் தீங்கிழைத்ததன் மூலம் உண்டான குற்றப்பழியையும், பாவத்தையும் மன்னித்துவிடு என்று யோசேப்புக்குச் சொல்லுங்கள்" என்று எங்களுக்குக் கட்டளையிட்டார்.ஆகவே, இப்பொழுது உம்தந்தையின் கடவுளுடைய அடியார்களாகிய எங்களின் குற்றப்பழியை மன்னித்தருளும். "அவர்கள் இதைத் தம்மிடம் அறிவித்தபோது யோசேப்பு அழுதார்.அவர் சகோதரரும் அழுது அவர்முன் தாள்பணிந்து, "நாங்கள் உம் அடிமைகள்" என்றனர்.யோசேப்பு அவர்களிடம், "அஞ்சாதீர்கள் நான் கடவுளுக்கு இணையானவனா?நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள். ஆனால் கடவுள் அதை இன்று நடப்பது போல், திரளான மக்களை உயிரோடு காக்கும் பொருட்டு நன்மையாக மாற்றிவிட்டார்.ஆகவே இப்பொழுது அஞ்சவேண்டாம். உங்களையும் உங்கள் குழந்தைகளையும் நான் பேணிக்காப்பேன்" என்றார். இப்படியாக அவர் அவர்களுக்கு ஆறுதல் அளித்தார் அவர்களுடன் இதமாகப் பேசிவந்தார்.யோசேப்பும் அவர் தந்தையின் வீட்டாரும் எகிப்தில் குடியிருந்தனர். யோசேப்பு நூற்றுப்பத்து ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார்.எப்ராயிமின் மூன்றாம் தலைமுறையைப் பார்க்கும் வரையிலும் மனாசேயின் மகன் மாக்கிரின் குழந்தைகள் தம் மடியில் விளையாடும் வரையிலும் யோசேப்பு உயிர் வாழ்ந்தார்.யோசேப்பு தம் சகோதரரிடம், "நான் சாகும் வேளை வந்துவிட்டது. ஆனால் கடவுள் உங்களைக் கனிவுடன் சந்திக்க உறுதியாக வருவார். ஆபிரகாம்,ஈசாக்கு யாக்கோபுக்குத் தாம் கொடுப்பதாக வாக்களித்த நாட்டிற்கு இந்த நாட்டிலிருந்து அவர் உங்களை அழைத்துச் செல்வார்" என்றார்.மீண்டும் யோசேப்பு "கடவுள் உங்களைக் கனிவுடன் சந்திக்க உறுதியாக வருவார். அப்பொழுது, நீங்கள் என் எலும்புகளை இங்கிருந்து எடுத்துச் செல்லுங்கள்" என்று சொல்லி, இஸ்ரயேல் புதல்வரிடமிருந்து உறுதிமொழி பெற்றுக்கொண்டார்.யோசேப்பு தம் நூற்றுப்பத்தாம் வயதில் இறந்தார். அவரது உடலை மருத்துவ முறைப்படி பாதுகாப்புச் செய்து எகிப்தில் ஒரு பெட்டியில் வைத்தனர்.

**பதில்பாடல் :** கடவுளைத் தேடி நாடுவோரே உங்கள் உள்ளம் ஊக்கமடைவதாக

### நற்செய்தி : மத்தேயு 10 : 24 – 33

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களை நோக்கிக் கூறியதாவது:"சீடர் குருவை விடப் பெரியவர் அல்ல. பணியாளரும் தம் தலைவரைவிடப் பெரியவர் அல்ல.சீடர் தம் குரவைப் போல் ஆகட்டும் பணியாளர் தம் தலைவரைப் போல் ஆகட்டும். அதுவே போதும். வீட்டுத் தலைவரையே பெயல்செபூல் என அழைப்பவர்கள் வீட்டாரைப் பற்றி இன்னும் தரக்குறைவாகப் பேச மாட்டார்களா?எனவே, அவர்களுக்கு அஞ்ச வேண்டாம். ஏனெனில் வெளிப்படாதவாறு மூடப்பட்டிருப்பது ஒன்றும் இல்லை அறியமுடியாதவாறு மறைந்திருப்பதும் ஒன்றும் இல்லை.நான் உங்களுக்கு இருளில் சொல்வதை நீங்கள் ஒளியில் கூறுங்கள். காதோடு காதாய்க் கேட்பதை வீட்டின் மேல்தளத்திலிருந்து அறிவியுங்கள்.ஆன்மாவைக் கொல்ல இயலாமல். உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்சவேண்டாம். ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள்.காசுக்கு இரண்டு சிட்டுக் குருவிகள் விற்பதில்லையா? எனினும் அவற்றுள் ஒன்று கூட உங்கள் தந்தையின் விருப்பமின்றித் தரையில் விழாது.உங்கள் தலைமுடியெல்லாம் எண்ணப்பட்டிருக்கின்றது. சிட்டுக் குருவிகள் பலவற்றைவிட நீங்கள் மேலானவர்கள். எனவே அஞ்சாதிருங்கள். மக்கள் முன்னிலையில் என்னை ஏற்றுக்கொள்பவரை விண்ணுலகில் இருக்கும் என் தந்தையின் முன்னிலையில் நானும் ஏற்றுக்கொள்வேன்.மக்கள் முன்னிலையில் என்னை மறுதலிப்பவர் எவரையும் விண்ணுலகில் இருக்கிற என் தந்தையின் முன்னிலையில் நானும் மறுதலிப்பேன்" என்றார்.

**தியானம்:** படைப்பிற்கு மேலான படைப்பாக இறைவன் மனிதனைப் படைத்து யாவற்றையும் பாதுகாத்து வழிநடத்தும்படியாக அவர் எமக்குக் கொடுத்திருக்கின்றார். நாம் அவற்றை எவ்வாறான வழிகளில் எமது வாழ்வில் கடைப்பிடித்து வாழ்கின்றோம். ஏனெனில் தந்தை, பிள்ளைகளாகிய எங்களுக்கு யாவற்றையும் தந்திருக்கின்றார், ஆனால் எவ்வாறான சூழல்களிலும் அவர் எங்கள் கூடவே இருப்பார் என்பதை மறந்துவிடுகின்றோம். அவரில் நம்பிக்கை கொண்டு வாழும பொழுது எவ்வாறான தீங்குகளும், எவ்வாறான எதிர்ப்புக்களும் எம்மை அணுகாது. ஏனெனில் மண்ணுலகில் ஒவ்வொருவரும் செய்யும் செயல்கள் ஒவ்வொன்றையும் இறைவன் பார்த்தவண்ணமாக இருக்கின்றார். அதற்கேற்ற பலனை நாங்கள் விண்ணுலகில் பெற்றுக்கொள்வோம். அதனால் மற்றவர்கள் எங்களைப் பலவழிகளில் துன்புறுத்தலாம், தண்டிக்கலாம், ஏன் கொலையும் செய்ய முயற்சிக்கலாம் இவ்வாறு உடலைக் கொல்பவர்களுக்கு அஞ்ச வேண்டாம், ஆன்மாவையும் உடலையும் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள் என்று (மத். 10:28)ல் இயேசு கூறுவதைப் பார்க்கின்றோம். எம்மத்தியில் காணப்படும் பகைமை, போட்டி, பொறாமை, நான் என்ற ஆணவம் இவை யாவற்றையும் நீக்கி வாழும்பொழுது வானத்துப் பறவைகளை பாதுகாத்து பராமரித்து வரும் இறைவன் அதனைவிட மேலாக படைத்த எங்களை அதற்கு மேலாகவே பராமரிப்பார். எனவே இதை உணர்ந்தவர்களாய் படைத்தவர் நல்லதோ, கெட்டதோ எந்த வேளையிலும் எங்கள் கூடவே இருந்து வழிநடத்துவார் என்று நம்பிக்கையுடன் வாழ்வோம்.